தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மார்ச் 31, செவ்வாய்க்கிழமை

பங்குனி 17, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லானே செயல் செய்ய வேண்டும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. கவன ஈர்ப்பு.

(அ) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலையைத் திறப்பது

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் வட்டம், தொட்டம் பட்டியிலுள்ள லாஸ்கோ ஸ்டீல் வார்ப்பட உருக்காலையை நிர்வாகத்தாலும், அங்கத்தினர்களாலும் நடத்த இயலாது மூன்றாண்டுகளாக மூடிக்கிடக்கும் நிலையில், சில தனியார் கம்பெனிகள் எடுத்து நடத்த முன்வருவதால் அதில் பணியாற்றிய 600 தொழிலாளர் நலனையும், நிதி அளித்துள்ள அரசு வங்கிகள், பொது மக்கள் நலனையும் கருத்தில் கொண்டு மேற்படி ஆலையைத் திறக்க அரசு நடவடிக்கை எடுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருவாளர்கள் தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் நிறுவனம் (முன்னாள் லாஸ்கோ ஸ்டீல்) ஆண்டிற்கு 50,000 டன்கள் சிறப்பு அல்லாய் மற்றும் எஃகு தயாரிப்பதற்காக 1962-ம் ஆண்டு துவங்கப் பட்டது. இந்நிறுவனம் அமெரிக்காவிலுள்ள லாட்ரோப் ஸ்டீல் நிறுவனத்துடன் Latrove Steel Limited நிதி மற்றும் தொழில் நுட்பத் தொடர்பு கொண்டது. வள ஆதாரங்கள், நிதி நிலைமை மற்றும் உற்பத்தி முதலியவற்றால் நட்டம் அடைந்தது. 1968-ம் ஆண்டு இந்நிறுவனம் மூடப்பட்டது. இந்நிறுவனத்தை மீண்டும் புனரமைப்பது பற்றி ஆராயப்பட்டது. இந்நிறுவனத்தின் நிர்வாகத்தை டிட்கோ (TIDCO) நிறுவனம் ஏற்று 1971-ம் ஆண்டு மீண்டும் திறந்தது.

2. 1974-ம் ஆண்டில் இந்நிறுவனத்தைத் தேசிய மயமாக்குவது எனக் கொள்கை அளவில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதற்குத் தக்க இந்நிறுவனத்தை தேசிய மயமாக்குவதற்கான மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டு சட்டப் பேரவை முன் வைக்கப் பட்டு நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால் குடியரசுத் தலைவர் இதற்கான ஒப்புதலை அளிக்கவில்லை. ஆகவே இந்நிறுவனத்தை தேசிய மயமாக்கும் செயற்குறிப்பு கைவிடப்பட்டது. தொடர்ந்து இந்தத் தொழிற்சாலை நட்டத்தில் இயங்கி வந்ததால், இதனை நடத்தி வந்த டிட்கோ நிறுவனம் இதனை நடத்த இயலாது என விலகிக் கொண்டது. டிட்கோ நிறுவனத்திற்கு மட்டுமே, அது இந்நிறுவனத்தை நிர்வகித்த காலக்கட்டத்தில் இந்த நிறுவனம் சுமார் ரூ. 71·15 லட்சங்கள் தரவேண்டியுள்ளது. இதற்கிடையில் டிட்கோ நிறுவனம், திருவாளர்கள் தர்மபுரி காஸ்டிங்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை மீண்டும் 4—4—1984 முதல் அதன் பழைய நிர்வாகக் குழுவிடமே ஒப்படைத்தது.

1987 மார்ச் 31] [திரு. க. இராசாராம்]

3. இந்நிலையில் இந்த நிறுவனத்தைப் புனரமைக்க, தேசிய மயமாக்குவது, அரசு எடுத்து நடத்துவது குறித்து எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் ஏற்கனவே முயற்சிக்கப்பட்டு பயன் அற்றுப் போய்விட்டன. இந்நிலையில் இந்த நிறுவனத்தைப் புனரமைப்பது மற்றும் திறப்பதற்கான வாய்ப்புகள் ஏதுமில்லை எனத் தெரிகிறது. தனியார்கள் யாராவது நடத்த முன்வந்தால் வரவேற்கத் தக்கதே.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாஸ்கோ ஸ்டீல் நிறுவனம், அரசுத் துறை, பொது மக்கள் மற்றும் பொது நிதி நிறுவனங்கள் ஆகியோரால் ஏறக்குறைய ரூ. 2½ கோடி, ரூ. 3 கோடிக்கு முதலீடு செய்யப் பட்டு நிறுவப்பட்டது; அந்தத் தொழிற்சாலையை 3 ஆண்டுகளாக மூடியிருக்கிறார்கள். அமைச்சருடைய கவனத்திற்கும் நாங்கள் நேரடியாகக் கொண்டு வந்திருக்கிறோம். பிறகு, அந்த நிறுவனத் தின் பங்குதாரர்கள், அதாவது ஷேர்ஹோல்டர்ஸ் எடுத்து நடத்து வதற்கு முன்வந்து அவர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்களும் ஏறக்குறைய 2½ ஆண்டுக்காலமாக ஒன்றும் செய் யாமல் அந்த நிறுவனம் நடப்பதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்கப்படாமல் மூடிக் கிடக்கிறது. சில தனியார்கள் நடத்து வதற்கு முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் அமைச்சரை நேரிலே சந்தித்து அந்த நிறுவனத்தை நடத்துவதற்குச் சில வழிகளைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களிடத்திலே நேரிடையாகத் தொடர்பு கொண்டு அந்த நிறுவனம் சிறப்பாக நடப்பதற்குத் தக்க நடவடிக்கை மேற் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர் களே, இந்த நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் சரிவர நடத்த இயலவில்லை. இப்பொழுது தனியார்கள் முன்வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் தார்கள். அவர்கள் வந்தால், அவர்களை வரவேற்று, அவர் களுக்கு, நடத்துவதற்குத் தேவையான சலுகைகளை அளித்து, ஒப்படைக்க அரசு தயாராக இருக்கிறது.